படியிலும் ஆயுதங்களை விடுத்து சந்நிதியில் ஐக்கிய மானதின் குறியீடு என்றும்; பக வத் கீதையின் விஷாதயோகம் முதல் மோக்ஷ சன்னியாச யோகம் வரை யுள்ள 18 அத்தியாயங்களின் குறியீடு என் றும்; ஐந்து புலன், ஐந்து பொறி, ஐந்து பிராணன், மனம் புத்தி அகங்கார மெனும் மூன்று என 18 தத்துவங்கடந்திடுதல் என் றும்; நான்கு வேதம், நான்கு உபாயம், ஆறு சாஸ்திரம், நான்கு வர்ணம் எனும் 18 நிலைகளைக் கடந்தது என்றும்; ஐம்புவன், எண்ராகங்கள், முக்குணம், அஞ்ஞானம், ஞானம் என்பவை கடந்தது என்றும், காமாதி பகைகள் ஆறும் திரிகரணங்களால் ஆகிய 18 கடந்தது என்றும் பலவாறு கூறுவர்.


பம்பா ஸ்நானம் புண்ணிய ஸ்நானம்

## பந்தள நகை

மகரசங்கிரம தினத்தில், மாலை நேர தீபாராதனைக்கு மட் டுமே சார்த்தப்படும் நகைகள் பந்தளத்திலிருந்து பாதுகாப்புடன் வரும். மலையாள மாதம் தனு 28-இல் அரண்மனையிலிருந்து நகைகள் கோயிலுக்கு வரும். நண்பகல் வரை பொதுமக்கள் தரிசனம் நிகழும். பிற்பகல் பூஜைக்குப் பின், பந்தள ராஜா வாள் கொடுத்துப் பிரதிநிதியாகப் பாவித்து மகனைப் போய் கண்டு வருக என அனுப்புவார். மகர மாதம் பத்தாம்நாள் அந்நகைகள் மீண்டும் பந்தளம் வந்து சேரும். ஐயப்பன் அணிகள் ஒரு பெட்டி யிலும், மாளிகைப் புறத்தம்மன் நகைகள் மற்றொரு பெட்டியிலு மாக அனுப்பப்படும்.

## பந்தளம்

மத்திய திருவிதாங்கூரில் உள்ளது. திருவனந்தபுரத்திலிருந்து சுமார் 100 கி.மீ.தூரம். ஐயப்பனின் ஜன்மபூமியாகவே கருதப்படு கிறது. இங்கு அமைந்த கோயில் அரண்மனைப் பூஜாமண்டபமா கவே காணப்படுகிறது. இதை தேவாரப் புரை என்பர். திருவுரு வத்துக்குரிய கூடம் ஆலமரத்தடியில் உள்ளது. 'நாயாட்டு விளி' எனும் ஐயப்ப மகிமைப் பாடல்களின் இடையே விலங்குக் குரல் ஒலிக்கும்.

ஆலயத்தில் சாளக்கிராமம் வழிபாட்டுக்குரியது. வெள்ளி அங்கி உண்டு; வில்லும் அம்பும் ஏந்திய தோற்றம்; அங்கி சார்த்தி வழிபடுவர். தென்மேற்கு மூலையில் தாலப்பார மலையிலிருந்து கொண்டு வந்த கல்லும் அதைச் சுற்றிச் சாளக்கிராமங்களும் உள்ளன. தினமும் மாலையில் தீபாராதனை உண்டு. அச்சன் கோயில் ஆறு அருகில் ஓடுகிறது. ஆற்றின் மறு கரையிலுள்ள நீர் நிலையில் ஐயப்பன் குளித்ததாக மேன்மை போற்றுவர். இக் குளத்தில் பக்தர்கள் காசு எறிவர். ஐயப்பன் சபரிமலை செல்லு முன் தந்தையிடம் ஒப்படைத்துச் சென்ற புனித நகைகள் பந்த ளத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

## பம்பை

சபரிமலை யாத்திரையில் பக்தர்கள் சங்கமிக்கும் புனித நதிக் கரை. பம்பை நதிக்கரைதான் பந்தள மன்னனுக்கு ஐயப்பனை அருளிய இடம். ஸ்ரீராமன் சீதையைத் தேடியபோது இந்நதியைக் கண்டதாக இராமாயணம் குறிப்பிடும். எழுத்தச்சன் இதனை உலகின் சிறந்த நதிக்கரை எனப்புகழ்வார். பக்தர்க்குப் பம்பாநதி தென்னக கங்கை. ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் கல்வாறு, கட்டாறு எனும் இரு நதிகள் பம்பையில் கலந்திடும் ஒரு திரி வேணி சங்கமம் உள்ளது. இங்குள்ள ஒரு கல்லில் இருக்கும் இரு பாதப்பதிவுகளை ஸ்ரீ ராம பாதம் என்பர்.

எருமேலி வழி நடந்து வருவோரும், சாலக்கயம் வழி வரு வோரும் இங்கு ஒன்றுகூடுவர். வாகனங்களில் வரும் பக்தர் களின் நடைப் பயணம் இங்கிருந்துதான் தொடங்குகிறது. போகி யன்று பம்பை நதி தீரத்தில் பக்தர் கூட்டம் ததும்பி வழியும். ஐயப்ப பக்தர்கள் இங்கு தங்கி பம்பா ஸ்நானம், பிதுர்க்கடன், பம்பா சத்யா எனும் விருந்து, நதியில் விடும் பம்பா ஜோதி எனும் புண் ணியச் சடங்குகள் நடத்துவர்.

## பம்பை கணபதி

பம்பை நதிக்கரையிலிருந்து சபரிமலை நோக்கித் தொடங் கும் யாத்திரையின் ஆரம்பம் பம்பை கணபதி கோயில். ஐயப்ப பக்தர்கள் தம் பயணம் இடையூறின்றி இனிதாக அமைய இங்கு வழிபாடு செய்வர். கற்பூரம் ஏற்றியும், தேங்காய் உடைத்தும், படிதொட்டு வணங்கியும் வழிபடுவர்; அதன்பின்பே யாத்திரை தொடங்குவர். நாகராஜன், பார்வதி தேவி, ஹனுமான், ஸ்ரீரா மன், பந்தள ராஜன் ஆகியோரையும் வணங்கிச் செல்வர்.

## பம்பா சத்யா

பம்பா நதிக்கரையில் கூடும் ஐயப்ப பக்தர்கள் புனித நீராடல், பிதுர்க்கடன் நிறைவேற்றல், பம்பா ஜோதி மிதக்கவிடல், பம்பா சத்யா எனும் நல்விருந்தில் பங்கேற்றல் எனும் முக்கியமான சம யக் கடமைகள் புரிகின்றனர்.

இவற்றுள் பம்பா சத்யா எனும் அன்னதானம் பெருஞ்சிறப்பு உடையது. எரிமேலியிலிருந்து சபரி செல்கையில் ஐயப்பன் சமைத்துச் சாப்பிட்டதாகக் கருதும் புராண ஐதீகமும், உதய ணனை வென்று சபரிமலையை மீட்ட பின்பு தன் வீரர்களுடன் அமர்ந்து பெருவிருந்தில் பங்கேற்ற நாட்டார் வழக்காற்றியல் ஐதீகமும் பம்பா சத்யாவின் ஐயப்பப் பிணைப்புகள். இவ்விருந்து கள் ஒவ்வொன்றிலும் ஐயப்பன் பங்கேற்கிறான் எனும் பக்திப் பிணைப்பும் உண்டு.

மிக விரைவில் தீர்மானிக்கப்படும் பம்பா சத்யாவுக்குக் குரு சாமியின் அனுமதியுண்டு. விருந்துக்கு வேண்டிய பலவும் இரு முடியில் உண்டு. சமையல் பணி யாருக்குப் பணிக்கப்படு கிறதோ அவர் அதைப் பெரும் பேறாகக் கருதுவர்; மகிழ்வுடன்